"SIDDHANTHAM" Vol. 17. No. 3

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு


| மலர் 17 | சுபானு௵ பங்குனிமீ 1944௵ மார்ச்சுமீ | இதழ் 3 |
|---|---|---|

பத்திராசிரியர் :
திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
51, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3


## மல்லப்பர் நல்லப்பர்

[பத்திராசிரியர்]

தமிழ்நாட்டில் தனிச்சிறப்பு பெற்றவர் மல்லப்பர். இவர் வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள வாலாஜா நகரில் வீர சைவக் கன்னர மரபில் காலுகூர்த்தி செங்களப்ப செட்டியாருக்கும் காடம்மையாருக்கும் இரண்டாவது புதல்வராக 65 ஆண்டுகட்குமுன் (23-7-1879, பிரமாதி ஆடி ௯ புதன்கிழமை) தோன்றினர். இளமையிலேயே தந்தையை இழந்த இவர், தமது தாயின் சொல் தவறாது
[illegible] ய்வ பக்தி, நல்லொழுக்கம், தரும சிந்தனை முத
[illegible] விளங்கினர். அக்காலத்தில் நாட[illegible]
[illegible] டையவரா யிருந்தனர். தமது 12-ம் வயு
[illegible] அக்க நாகம்மாள் என்னும் பெண்மணியை
[illegible] டித் திருமணம் புரிந்து, அவ்வம்மையார

ருடன் இல்லறம் நடத்தி நான்கு புதல்வர்களையும் நான்கு பெண்களையும் பெற்றனர். பிறகு அவ்வம்மையார் இவ்வுலக வாழ்வை நீத்தனர். திரு. செட்டியாரவர்கள் திருமதி. சக்கரம்மாளை மணந்து ஒரு புதல்வியைப் பெற்றனர். இல்லறத்திற்குப் பொருள் ஈட்டுவது இன்றியமையாததாகலின் இவர் விறகு, சஜ்ஜை, பிரம்பு, கம்பளிக் கயிறு, வட்டிக் கடை, நெல் ஆலை, மளிகைக் கடை முதலிய பலவகை வியாபாரங்கள் செய்து நிரம்பவும் செல்வம் பெற்றனர். இவ்வியாபாரங்களில் இவருக்குப் பெருந்துணையா யிருந்தவர்கள் உஜ்ஜினி சங்கப்பா அவர்களும் அவருடைய புதல்வர் உஜ்ஜினி சித்தப்பா (இவருடைய மருகருள் ஒருவர்) அவர்களுமே யாவர்.

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளால் தொடங்கப் பெற்று, திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்களால் வளர்க்கப் பெற்ற "வாலாஜா நகர் திருக்குறள் கழகம்", திரு. செட்டியாரவர்களுக்கு ஒரு சிறந்த பற்றுக்கோடாகப் பல பணிகள் செய்வதற்கு றுதுணையாயிற்று. செல்வத்துப் பயனே ஈதல் என்பதை நன்குணர்ந்த திரு. மல்லப்ப செட்டியார் பலவகையான அறங்களைத் தொடங்கி அவை நடத்தற்குரிய நிரந்தரமான ஏற்பாடுகளையும் பல ஆண்டுகட்குமுன்னரே முடித்து வைத்தார்கள். அவற்றுட்சில வருமாறு:—(1) தமது மரபைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகட்குக் கல்வி நலன் தருவதற்கு ஒரு ஜில்லா சங்கம் கண்டு தலைவராகப் பணிபுரிந்து, பொருள் தந்தும் திரட்டியும் அதை நிலைபெறச் செய்தல். (2) ஆவணி மாதந் தோறும் தமது மரபுக் கொள்கையின்படி ஏழைகட்குணவளிக்கச் சுமார் ஆயிரம் ரூபா பெறுமான சொத்தை எழுதிவைத்தல். (3) வாலாஜா நகரிலுள்ள சில ஆலயங்களில் சில நித்திய நைமித்திக பூசைகட்குடலாகப் பொருள் வைத்தல். (4) ஷை நகர் தமிழ் வேத பாராயண சபைக் கட்டிடத்துக்குப் பொருளுதவி அதைப் புதுப்பித்துப் பயன் பெறுமாறு செய்தற்குச் சில பெரியார்களுடனிருந்து முடித்து வைத்தல். (5) ஷை நகரிலுள்ள அனைவருடைய நன்மையையும்நாடி மைசூர் சிற்பசித்தாந்தி ஸ்ரீலஸ்ரீ சித்தலிங்கசுவாமிகளைக் கொண்டு நகரைச் சுற்றிலும் சங்குசக்ர ஸ்தாபனம் செய்து சுமார் 2000 ரூபா செலவிடல். (6) இதுவரையில் தமிழ் நாட்டில் எவரும் செய்யாத ஒரு அரிய தருமத்தைச் செய்தல். இது யாது ?

கோயில் திருவிழாக் காலங்களில் வரும் மக்களுக்குச் சமய போதனை செய்வது பண்டைக்காலத் தமிழ் வழக்காயிருந்தது. இது சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் இந்திர விழாவின் ஏற்பாட்டைப் பற்றிய விவரங்களால் நன்கு விளங்கும். சமய

போதனை நிகழ்ந்த இடம் அக்காலத்தில் பட்டி மண்டபம் எனப்பட்டது. இதை யுணர்ந்த நமது செட்டியார் அவர்கள் வாலாஜா நகரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் திருவிழாவில் சமயச் சொற்பொழிவுகட் கென்றே இரண்டு வீடுகளைத் தானமாகத் தந்துள்ளார். இந்தத் தரும சாசனம் நமது சித்தாந்தம் பத்திரிகையில் ஆறுவது மலரில் 155-159 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இது



15-5-1933-ல் எழுதப்பெற்று, வாலாஜா நகர் சப் ரிஜிஸ்திரார் ஆபீஸில் 1933-வது ௵த்திய 908-வது தஸ்தவேஜாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் முக்கிய பகுதிகள் சில கீழ் வருவனவாகும்:- இவ்வூரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரநாத ஸ்வாமி சிவாலயத்தில் பங்குனி மாதத்தில் நடக்கும் பிரம்மோத்ஸவத்தை யொட்டி ஐந்து நாட்களுக்குக் குறையாமல் சமயப் பிரசாரமும் தமிழ் வளர்ச்சியும் செய்வதற்கு ஓர் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற எண்ணம்...எனக்குச் சிலகாலம்உண்டு. அதற்காகக் கீழ்வரும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன்:.....எழு தர்மகர்த்தர்கள் தேர்ந்தெடுத்தல். வாலாஜா நகர் முனிசிபல் தலைவர் இவர்களுள் ஒருவர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரால் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் ஷை கமிட்டியில் ஒரு அங்கத்தவராக இருக்க வேண்டியது... எக்காரணத்தினலாவது

பிரம்மோத்ஸவம் நடைபெருவிடினும், ஷை உத்ஸவம் நடைபெற வேண்டிய மாதத்தில் சொற்பொழிவுகள் நடக்க வேண்டும்...... இந்த தர்மம் சரியாக நடைபெருவிட்டால் ஷை பொது நன்மைக்குரியவர்கள் சட்ட முறைப்படி ஷை தர்மங்களை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய உரிமையுடையவர்கள்...சொத்து விவரம் :—வாலாஜா நகர் முதல் வார்டு, மதராஸ் ட்ரங்க் ரோட், தென்னண்டை வாடை, 41/169, 42/160 என்ற எண்ணுள்ள இரண்டு வீடுகள் (நீளம் சுமார் 170 அடி, அகலம் சுமார் 62 அடி, மதிப்பு சாசனப்படி சுமார் ரூபா ஆயிரம், வருஷ வருமானம் சுமார் ரூபா 200). இதற்குப் பல ஆண்டுகளாக வாலாஜா போர்டு பள்ளிக்கூட ஆசிரியர் திரு. வா. கி. ஜானகிராம முதலியார் காரிய தரிசியாகப் பணிபுரிந்து வருகிறார்.

இந்தத் தருமத்தைத் திரு. மல்லப்ப செட்டியாரவர்களே தர்ம பரிபாலனக் குழுவின் தலைவராக இருந்து கடந்த பதினொரு ஆண்டுகளாக நடத்தி வந்தார்கள். இவர்கள் தமது 65-வது வயதில் சிலநாட்கள் குடலேற்ற நோயால் (Strangulated hernia) வருந்தி சஸ்திர சிகிச்சை செய்யப்பெற்று, நிகழ் சுபானுலு மாசிமீ ருவ (17-2-44) வியாழக்கிழமை பகல் 12 மணிக்குச் சிவலிங்கைக்யமாயினர். இவர்களுடைய மோக்ஷ தீபாராதனை மிகச் சிறப்பாக 1-3-44ல் நடைபெற்றது. அன்று காலை சமாதி பூசையும், பகலில் மாகேசுவர பூசையும் நடந்தன. மாலையில் ஒரு அநுதாபக் கூட்டம் நடந்தது. அதில் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் திரு.ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திரு. மயிலைகிழார் இளமுருகனார், திரு. குஞ்சிதபாதம் ஐயர் ஆகிய மூவரும் முறையே 'நீத்தார் பெருமை', 'மரணத்தின் பின் மனிதர் நிலை', 'செட்டியார் வாழ்க்கை' என்ற பொருள்கள்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பல கழகங்களின் சார்பாக இரங்கற்பாக்கள் வாசித்து வழங்கப்பட்டன. அனைவரும் செட்டியாருடைய நற்குண நற்செய்கைகளைப் பாராட்டி, அவருக்கு வீர சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ சித்தலிங்க சுவாமிகள் அளித்த "சத்தர்ம சிரோமணி" என்ற பட்டம் பொருந்துவதையும் புகழ்ந்தார்கள்.

# சமாஜ மாதக் கூட்டங்கள்

நமது சமாஜத்தின் ஜனவரி மாதத்திய இரண்டாவது கூட்டம் திரிச்சிராப்பள்ளியிலுள்ள தருமபுர ஆதீன மௌன மடத்தில் 28-1-44 முதல் 4 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் திரிச்சி வழக்கறிஞர் திரு. N. P. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் மூவர் தேவாரம் பற்றியும், திரு. எஸ். சீதாராமையர் திருக்கோவையார் பற்றியும் பேசினார்கள். திரு. சின்னசாமி ஐயர் திறப்புரையும் திரு. R. ஸ்ரீநிவாசையர் ஆசியுரையும் கூறினார்கள். 29-1-44 முதல் மூன்று நாட்கள் திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை (எட்டு ஒன்பது திருமுறைகள்) கிருஷ்ணமூர்த்தி சர்மா, M. A. (சைவம்) கா. இராமநாதன் செட்டியார் (அடியடைந்த காரணம்) வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் (பெரிய புராணம்) இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (குமரகுருபரரும் பண்டார சாத்திரமும்) N. கனகராஜையர் (சைவத் தமிழ்) V. சுந்தரேச வாண்டையார் (திரிசிராமலைக் கல்வெட்டுக்கள்) மீ. சுந்தரம் பிள்ளை (சிவபோக சாரமும் தருமையாதீன வரலாறுகளும்) கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் (சாத்திரமும் தோத்திரமும்) மு. இராசமாணிக்கம், B. O. L. (பெரிய புராணமும் கல்வெட்டுக்களும்) தே. பெரியசாமிப் பிள்ளை (துறைசைச் சிவஞான முனிவரும் பண்டார சாத்திரமும்) சாமிநாத பிள்ளை (சேக்கிழார் பிள்ளைத்தமிழ்) T.S. கந்தசாமி முதலியார் (திருத்தொண்டர் திருவுள்ளம்) துடிசைகிழார் சிதம்பரனார் (திருமந்திரம்) T. K. சிதம்பரநாத முதலியார் (பரதத்துவம்) குளித்தலை அரங்கசாமி ஐயர் (சிவாகமப் பிரமாணம்) T. பட்டுசாமி ஓதுவார் (ஆலய வழிபாடு) M. கணேசையர், B.A., B.L. (திருப்புகழ்) அ. மு. சரவண முதலியார் (திருத்தொண்டரும் திருக்குறளும்) சிங்கப்பெருமாள் நாட்டார் (முப்பொருள்) இராம கோவிந்தசாமிப் பிள்ளை (பதினொராந் திருமுறை) சேங்காலிபுரம் வைத்யநாத சாஸ்திரிகள் (காளத்தித் திருத்தாண்டகம்) ஆகிய பேரறிஞர்கள் தத்தம் பெயருக்குப் பின் குறிக்கப்பட்ட பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். 30-1-44 பிற்பகலில் பொன்மலை திருமதி. அருணசல பாலாம்பாள் அம்மையாரின் இன்னிசை யரங்கு நடைபெற்றது. 31-1-44 இரவு திருமுறை வீதியுலா பாராயணத்துடன்

நடந்தது. இக்கூட்டத்தைச் செம்மையாக நடத்தி வைத்த திருத் தருமபுர ஆதீனத்தினருக்கும் சிறப்பாக அவ்வாதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களுள் ஒருவராகிய ஸ்ரீமத் மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகட்கும் நமது சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது. இந்த நான்கு நாட்களில் நடைபெற்ற இக் கும்பாபிஷேகத் திருமுறை மகாநாட்டுச் சமாஜ மாதக் கூட்டத் தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேறின :—

1. திருக்கோவில்களில் நித்யபடியிலும் விழாக் காலங்களிலும் பன்னிரண்டு சைவத் திருமுறைகளையும் வரன் முறையாக முழு தும் பாராயணம்செய்து முடித்து முடிவில் திருமுறை வீதியுலா விழாவும் நடத்தல்வேண்டும். 2. பூஜா காலங்களில் தமிழ் வேத மாகிய பன்னிரு திருமுறை அருட்பாக்களை ஓதி முடித்த பின்னரே ஆசிர்வாதம் சொல்லல்வேண்டும். 3. ஆலயங்களில் நடைபெறும் சைவ சமய சொற்பொழிவுகளைச் சென்னை சைவசித்தாந்த சமாஜத் தின் சார்பில் நடைபெறச் செய்வதாகக் கருதி இணைத்தல்வேண்டும். 4. சமாஜக் காரியதரிசி அவர்கள் இவைகளை நடைமுறையில் அனுட் டிக்கச் செய்வதற்குக் கோயில் அதிகாரிகளுக்கு ஆவனசெய்ய அறி விக்கவேண்டும்.

நமது சமாஜத்தின் பிப்ரவரி மாதக்கூட்டம் திருப்பாதிரிப் புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் திருவாளர்- திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் 7-2-1944 திங்கட்கிழமையன்று நடந்தது. திருவாளர்கள் கா. இராமநாதன் செட்டியார், B. A. B. L. கே. எம். வேங்கடராமையா, M. A., B.O.L. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய மூவரும் முறையே அடியடைந்த காரணம், அரசர் காட்டிய வழி, மணிவாசகர் கண்ட வாழ்வியல் என்பனபற்றிப் பேசினார்கள். திரு. சண்முகானந்த அடிகள் சமாஜத்தின் சார்பாகத் தலைவர், சொற்பொழிவாளர்கள், கூட்டத்தை நடத்தி உபசரித்த திருமடத்துச் சுவாமிகள் முதலிய அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

நமது சமாஜத்தின் மார்ச்சு மாதக்கூட்டம் தென்னார்க்காடு ஜில்லா கண்டாச்சிபுரத்தில் 1944ஆம் மார்ச்சுமீ 24உ வெள்ளிக் கிழமை மாலை திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர் கள் தலைமையில் நடைபெறும்.

## சமாஜ அறிக்கைகள்

திருக்காரிகரைக்குச் சமாஜத்தினர் எண்மர் 19, 20-2-1944ல் யாத்திரையாகச் சென்றனர். நாகலாபுரத்தில் 20-2-1944 இரவு எட்டு மணிக்குப் போர்டு ஸ்கூல் தலைமையாசிரியர் தலைமையில் திரு. ம. பாலசுப்பிரமணியனாரும், திரு. கா. இராமநாதன் செட்டியாரும், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களும் முறையே "திருக்காரிகரை" "தொண்டு" "பக்தி" என்பனபற்றிப் பேசினார்கள். திரு. பிள்ளையவர்கள் இயற்றிய பாடல்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

மாடம்பாக்கத்தில் உள்நோக்குப் பழக ஒரு யாத்திரை செய்யக் கருதியதுண்டு. அதிற் கலந்துகொள்ள அன்பர் ஒருவரே விண்ணப்பம் செய்தனர். குறைந்தது 20 அன்பர்களாவது இத்தகைய முயற்சிகளிற் கலந்து கொண்டாலன்றி வேண்டிய ஏற்பாடுகளைத் திருப்திகரமாகச் செய்தல் இயலாது. அவ்வாறு விண்ணப்பங்கள் சேரும்வரையில் இவ்வியாத்திரை நடைபெறாது.

நமது சமாஜ நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை 'ஞானந்த நிலயத்'தில் 19-3-1944 ஞாயிறு மாலை 4 மணிக்குக்கூடி சமாஜக் கணக்குகள், பணச்சேமிப்பு, வாலாஜா திருவிழாச் சொற்பொழிவுக் குழுவில் சமாஜப் பிரதிநிதி தேர்தல், சமாஜத் தொண்டுகளை வகுத்தல் முதலியவற்றைத் தீர்மானிக்கும். நிர்வாக சபையினர் அனைவரும் வேறு அறிக்கையின்றியே தவிராது வருக.

இங்ஙனம்

கா. இராமநாதன், காரியதரிசி

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 38-வது ஆண்டு அறிக்கை

(மலர் - 17; இதழ் 1; 16-ம் பக்கத்தொடர்ச்சி)

திருமடங்களிற் சமயப் பிரசாரம் —இக்கழக உறுப்பினர்களின் தூண்டுதலின்பேரில் சைவத் திருமடங்கள் சமயப் பிரசாரம் செய்வதில் முனைந்து நிற்கும் நற்பேறு பெற்றுள்ளன. தருமபுர ஆதீனத்தில் கோடை விடுமுறையில் சிவஞானசித்தியார் வகுப்பொன்று மிகச் செம்மையாக நடைபெற்றது. இவ்வாதீனம் பல நூல்களை வெளியிட்டு வருவதோடு "ஞான சம்பந்தம்" என்ற பெயருடைய

ஒரு மாதத் தமிழ்ப் பத்திரிகையையும் நடத்துகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்திலும் பல கோயில்களில் நடைபெறும் விழாக்களில் சமயப் பிரசாரம் செய்யப்படுகிறது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது கடலளவு" என்ற முதுமொழியைச் சிறிது மாற்றிச் "செய்தது கைம்மண்ணளவு செய்யவேண்டுவது கடலளவு" என்றே இப்பொழுது கூறுதல் அமையும். சென்னை இந்து சமய நிலையப் பாதுகாப்புக் கழகத்தின் மேற்பார்வையில் இனி வரும் ஆண்டுகளில் சைவத் திருமடங்கள் எண்ணக்கூடிய வழிகளிலெல்லாம் சமயப் பிரசாரம் செய்து புகழும் புண்ணியமும் பெறுமென்று நமது சமாஜம் நம்புகின்றது.

**மணிவிழாக் கூட்டங்கள் :**—இவ்வாண்டில் நமது சமாஜத் தலைவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், 'சித்தாந்தம்' உதவிப் பத்திராசிரியராகப் பணிபுரிந்த திருவாளர் பூ. சமரபுரி முதலியாரவர்கள் ஆகிய இரு பெரியார்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழாக்கள் ஆரவாரமற்ற தூயமுறையில் இறை வழிபாடு, சொற்பொழிவுகள், வாழ்த்துரைகள், நூல் வெளியீடு முதலிய சிறந்த அங்கங்களோடு நடைபெற்றன. இப்பெரியார்கள் நீடூழி வாழ்ந்து சமாஜத்துக்குப் பல வழிகளிலும் உதவி புரியுமாறு இறைவனை நமது சமாஜம் வழுத்துகின்றது.

**பெரியார்கள் பிரிவு :**—இவ்வாண்டில் நமது சமாஜத்துக்குப் பல வழிகளிலும் சிறந்த தொண்டு புரிந்த அன்பர் சிலர் சிவபதமடைந்த செய்தியை நமது சமாஜம் மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கின்றது. பெங்களூரில் நமது சமாஜ விசேஷ மகா நாட்டில் தலைமை வகித்த திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார் நமது சமாஜத்தின் 27-ம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர் திரு. மா. வே. நெல்லையப்பப் பிள்ளை, பல ஆண்டுகள் நமது சமாஜக் கணித பரிசோதகராகத் தொண்டு புரிந்த திரு. இரத்தின முதலியார், நமது சமாஜபோஷகரும் வரவேற்புக் கவிப்புலவருமாகிய பண்டிதரத்தினம் குகஸ்ரீ புழல் திருநாவுக்கரசு முதலியார் ஆகிய நால்வரையும் நாம் இழந்தோம். இப்பெரியார்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**நன்றி கூறல் :**—இவ்வாண்டில் மணிவிழாச் சொற்பொழிவுக் கூட்டங்கள் மூன்றும் பொதுக்கூட்டங்கள் மூன்றும், நிர்வாக சபைக் கூட்டங்கள் இரண்டும் நடைபெற்றன. இக்கூட்டங்களின் நடவடிக்கை விவரங்கள் அவ்வப்போது நமது பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இச்சமாஜ உறுப்பினர் தொகை இவ்வாண்டின்

தொடக்கத்தில் 297 ஆகவும் இறுதியில் 316 ஆகவும் உள்ளது. இத்தொகையை அதிகரிக்கச் செய்வது தொண்டர்கள் முதற் கடமையாகும். நமது சமாஜத்துக்குப் பலவழிகளிலும் தொண்டு புரிந்துவரும் சைவ சிலர்கட்கும், சமாஜ உத்தியோகஸ்தர்கட்கும், சமாஜச் செயல்களுக்கு இடமளித்துவரும் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபைக்கும், இவ்விழாவை நடத்திவைக்கும் அன்பர்கட்கும் நமது சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது. மேன்மேலும் சைவத் தொண்டு புரிந்து சமாஜத்துக்கு உதவி செய்யும்படி அவர்களை வேண்டுகின்றது. இங்ஙனம்: உத்தரவின்படி ம. பாலசுப்பிரமணியன், காரியதரிசி.

38-வது ஆண்டுக் கணக்குத் தொகுப்பு :—வரவு - சந்தா 492-8-0, இணைத்தல் சந்தா 15-0-0, ஆயுள் சந்தா 130-0-0, வெளியீடுகள் விற்பனை 192-5-6, தபால் வகை 22-11-6, வட்டி வகை 46-2-8, பரீக்ஷை கட்டணம் 20-0-0, நன்கொடை 1-0-0, ஞானியார் சுவாமிகள் நினைவுநிதிக்கு 291-14-6, ஆரம்ப இருப்பு 989-12-0 ஆக 2201-6-2. செலவு - சித்தாந்தம் 381-0-4, தபால் வகை 113-7-3, இதர வகை 16-3-0, இந்தியன் பாங்கியில் டிபாசிட்டு 1666-2-8, பாராட்டுக் கூட்டங்கள் 12-4-0, முடிவு இருப்பு 12-4-11 ஆக 2201-6-2. சமாஜப் பொருள் வலிவு இந்தியன் பாங்கியில் இருப்பு 2845-8-11. ம. பாலசுப்பிரமணியன், காரியதரிசி, தி. க. சுந்தரம் பிள்ளை, பொருட்காப்பாளர், எஸ். வையாபுரிப் பிள்ளை, ஆண்டுக் கணித பரிசோதகர்.

# மதுரை மாநாட்டுப் பேருரைச் சுருக்கம்

[பத்திராசிரியர்]

திரு பு. ர. சுவாமிநாதனார் இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை :—இந்த இளைஞர் மகாநாட்டிற்கு அடியேனைத் தலைமை வகிக்குமாறு பணித்தமைக்கு யான் நன்றியுடையேன். இச்சமாஜத்தைத் தோற்றுவித்து இதற்குத் தாயாய்த் தந்தையாய் இதை வளர்த்து வந்த என் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்பால் சமாஜத்தினர் நன்றி பாராட்டுமுகமாக அடியேனுக்கு இப்

பணியைத் தந்தருளினர் எனக் கருதி இத்தொண்டை ஏற்றுக்கொண்டேன். அடிகளுடைய ஆசி தோன்றாத் துணையாயிருந்து என்னை நன்னெறியிற் செலுத்தும் என்ற துணிபோடு இச்சேவையை ஒல்லும் வகை ஆற்றமுற்படுகின்றேன்.

இப்பாண்டி நாடு சைவ இளைஞர்கட்கு ஆதிகாலந்தொட்டு வீரத்தைப் புகுத்தும் பண்புடையது. "என்றும் இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே! உளையாய் என் உள்ளத்துறை" என்று புகழப்பட்ட முருகன் தனது ஆறு படைவீடுகளில் நான்கை இந்நாட்டிலேயே அமைத்துக்கொண்டிருக்கிறான். இந்நாட்டிலே, இப்பதியிலே சைவத்தை நிலைநாட்டிய பெருமை ஓர் இளைஞருக்கே கிடைத்தது. மங்கையர்க்கரசியம்மையார் "இவர் சிறு குழந்தையாயிற்றே என் செய்வது" என்று எண்ணிய கருத்தை அறிந்த நம் இளைஞர் சம்பந்தப்பெருமான் அவர்களை நோக்கிப் "பானல்வாயொருபாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்...ஈனர்கட்கெளியேனலேன் திரு ஆலவாய் அரன்நிற்கவே" என்று தைரியம் கூறினார். என்ன வீரச்சொற்கள்! நாமும் இத்தகைய வீரம் பெறவேண்டியது இன்றியமையாததாகும். நாம் தற்போது குழுமியுள்ள தலம் திருஆலவாய். இது தமிழுக்கும் சைவத்திற்கும் நிலைக்களமாக இருந்து வருகின்றது. இப்பாண்டி தேசத்தில் முச்சங்கங்கள், மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், விஜயநகர நாயக்கர்கள், சேதுபதிகள் இன்னோரன்ன அரசினர் ஆண்டு சிறப்பாகத் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றிய அரும்பணி நம்மனோரால் என்றும் மறக்கற்பாலதன்று. பின்னாளிலே பாண்டித்துரைத் தேவரவர்கள் நான்காம் சங்கம் கண்டு, இடைக்காலக் குறையை நிறைவுபடுத்தியுள்ளார்கள். விவேகாநந்த அடிகளை அமெரிக்காவிற்கு அனுப்பிய சிறப்பு பாஸ்கர சேதுபதியவர்க்கேயன்றோ? நல்லிசைப் புலவர் நக்கீரர், பக்திரசப்புலவர் பரஞ்சோதியார் முதலியவர் இத்தலத்தைச் சிறப்பித்துள்ளனர். காவியங்களிற் சிறந்த சிலப்பதிகாரத்திற்கு உரிய நகராக இருந்து, நாட்டிற்கும் மொழிக்கும் சீரையும் சிறப்பையும் இது தந்துகொண்டிருக்கிறது.

நாம் கூடியிருக்கும் காலம் இவ்வுலகம் முழுமையும் ஒரு பெரும்போரில் ஆழ்ந்து கிடக்கும் காலமாகும். புராதன காலத்தில் சமயம் வேறு, பொருளாதாரம் வேறு, அரசியல் வேறு என எண்ணியிருந்தனர். ஆனால் தற்காலத்தில் இவை மிக நெருங்கிப் பிணைப்பட்டுக் கிடக்கின்றன. சில தினங்கட்குமுன் ஓர் ஆலயம் சென்றேன். அங்கே விமானப்படை யெடுப்புப் பாதுகாப்பு ஏற்

பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சில குருக்கள்மார் அதிற் பங்கெடுத்துக்கொள்வதாகவும் கண்டேன். அரசியலும் சமயமும் எவ்வளவு நெருங்கிவிட்டன! இது போன்றே பொருளாதாரமும் சமயத்துடன் நெருங்கிய தொடர்புடையதொன்றே. மதிநுட்பம் நிறைந்த கேள்விகட்கும் அதிதீவிர முடிவுகட்டும் உலகில் நாம் வாழ்கிறோம். விஞ்ஞானத்துறையில் பிறர் முடிவைக் கொண்டு, அவர் தகுதிக்கேற்ப நாம் அவற்றை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் சமயத்துறையிலோ ஒவ்வொருவரும் தமது சொந்த முயற்சி அநுபவம் கொண்டுதான் முன்னேற முடியும். சமயப்பற்றுள்ளோர் விலகியிருப்பின் சமயம் அறவே மறைந்துவிடுமோ என்ற ஐயமும் ஏற்படுகின்றது. சமயப் பெரியோர் வழிகாட்டிகளாக இருக்கவேண்டும்.

தற்காலத்தில் சமய அறிவு மிகவும் குறைந்து வருவதைக் காண்கிறோம். முக்கியமாக இளைஞர்கட்குச் சமய அறிவு இன்னதென்பதே தெரியவில்லை. இதற்குக் காரணம் அவர்கட்குச் சமயத்தைப்பற்றி வீட்டில் கூறுவாரில்லை, படிக்கும் பள்ளியிலும் போதிப்பாரில்லை. பல மதத்தினர் அடங்கிய பள்ளியில் இதைப் போதிப்பது முடியாததாக இருக்கலாம். ஆகையால் வீட்டில் சமய அறிவு கட்டாயம் வளர்க்கப்பட வேண்டும். ஆலயங்கள், மடங்கள் இதற்கு ஏற்ற இடங்களாகும். சமய போதகர்கள் ஆங்காங்கே நியமிக்கப்பட்டுப் போதனைகள் ஒழுங்கான முறையில் வரையறுக்கப்பட்டுத் தினசரி வாழ்க்கைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்படவேண்டும். வாழ்க்கைக்கும் சமயத்திற்கும் தொடர்பில்லை என்ற எண்ணம் அறவே ஒழிந்து, வாழ்க்கையில் எத்துறைக்கும் சமயநிலை அரண் செய்கின்றது என்று திட்டமாகக் கருதும்படி இச்சமய வகுப்புக்கள் பயன்பட வேண்டும். நம் சமாஜம் இத்தகைய வகுப்புக்கட்குரிய திட்டத்தை வகுக்கலாம். இத்திட்டத்தை ஏதாவது ஓர் ஆலயத்தில் நடத்தி அதன் பயனைக் காணலாம். இவ்வகுப்புக்கள் மாணவர்கட்கு ஏற்படும் ஐயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நடத்தப்பட வேண்டும்.

இக்கருத்திற்கு அரண்செய்யும் நூற்கள் சில நமக்குத் தேவை. சரித்திர பூர்வமாக ஒப்புக்கொள்ளக்கூடிய வாழ்க்கை வரலாறுகள்; தேவாரம் முதலிய நூல்களில் அடிக்கடி சந்திக்கும் கிளைக் கதைகள் (Allusions) என்னவென்றும், அவற்றின் சமயக் கருத்துக்கள் (Esoteric meaning) என்னவென்றும் தெரிவிக்கக்கூடிய நூல்கள்; நாம் அவ்வப்போது கொண்டாடும் பல விழாக்கள் பண்டிகைகள் ஏன் ஏற்பட்டன, எவ்வாறு கொண்டாடப் படவேண்டும்,

அவற்றின் உட்பொதிந்துள்ள சிரிய கருத்துக்கள் எவை என்பதைத் தெளிவாகச் சொல்லக்கூடிய புத்தகங்கள்; ஆகமக் கருத்துக்களைத் தமிழில் விளக்கக் கூடிய உரைநடை நூல்கள் ஆகிய இவை மிகவும் தேவையாயிருக்கின்றன. நம் சகோதர மதத்தினர் எவ்வாறு நூல்களைப் பயன்படுமாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை உங்கட்குக் காட்டுவதற்காகச் சில நூல்களைக் கொண்டுவந்துள்ளேன். சிறுவர் மனதில் பதியும் வண்ணம் அவை இருப்பதால் நாளடைவில் சமய வளர்ச்சி தானே ஏற்படும்.

தேவார திருவாசகங்களிலிருந்து உயர்ந்த கருத்துக்களடங்கிய பாடல்களைச் சில குறிப்பிட்ட தலையங்கங்கட்குப் பயன்படுத்தலாம். அருச்சனைக்குச் "சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி" என்ற தேவாரத்தையும், முறையீட்டுக்கு "முன்னையென் வினையினாலே" என்ற பாடலையும், பாவ மன்னிப்புக்கு "முந்தித்தானே முளைத் தானை" என்ற பாடலையும் நாம் உபயோகிக்கலாம். சமயத்தைப் பற்றிய எண்ணங்கள் இளங்காலத்தில் மனதிற் பதிந்தால்தான் பிற் கால வாழ்க்கைக்கு அவை பயன்படும். அக்காலம் (Wax to receive and marble to retain) மெழுகுபோல் பதித்துக் கல்லெழுத்துப்போல் நிறுத்திவிடும் காலமாகும். சிறு குழந்தைகள் பெற்றோர்கள் செய்வதைப் போலவே அநேக விஷயங்களைச் செய்கின்றன. தாய் தந்தையர் கடவுளை வணங்கும்போது, அதைப் பார்த்த குழந்தையும் தானும் அதைச் செய்ய முயல்கின்றது. தோத்தரித்தால் குழந்தையும் தோத்தரிக்கும். வெள்ளிக்கிழமை தோறும் ஆலயம் செல்லும் பழக்கமுடைய குடும்பங்களில் குழந்தைகள் எவ்வளவு ஆவலுடன் அந்நாளை எதிர்பார்க்கின்றன! குழந்தைகளை ஒழுங்காக வளர்க்கும் பெரும் பொறுப்பு பெற்றோர்கட்குண்டு. ஆனால் தற்காலத்தில் சமயக் கருத்துக்களை இளைஞர்கட் கூட்டுவதில் தாய் தந்தையர் பொறுப்பற்றவர்களாகவே இருக்கின்றனர். Religion is primarily caught and not taught (சமயம் ஏற்கப்படுவது கற்கப் படுவதன்று) என்று ஆங்கிலத்தில் ஒரு பெரியார் அழகாகக் கூறுகிறார். ஏற்கப்படுவது பெற்றோர்களிடமிருந்தே. இடிரெனப் பாடம் கற்பிப்பதுபோல் சமய அறிவு கற்பிக்கப்பட முடியாது. ஓர் ஆலயத்தையோ சமய நூலையோ அறிவதற்கு முன் ஒரு சிறுவன் தனது பெற்றோரையே அறிகிறான், அவர்களுடைய நற்செய்கைகளும் நல் வாழ்க்கையும் அவன் மனதில் பதிந்து விடுகின்றன. பின்னரே அவன் கடவுள் எண்ணத்திற்கு நாளடைவில் வருகிறான். பொதுவாக இந்துக்களும் சிறப்பாகச்

சைவர்களும் சிறுவர்களை வளர்ப்பதில் சமயக் கல்வியைப்பற்றாக கவலை கொள்வதில்லை. சமய அறிவு குறைந்ததே இப்போரிற்கொரு முக்கிய காரணம் என்பதை உணர்ந்த இங்கிலீஷ் கன்ஸர்வெடிவ் கட்சியினர் சமயபோதனைக்குப் பள்ளிக்கூடங்களில் முக்கிய ஸ்தானம் தரவேண்டுமென்ற தீர்மானத்தைக் கல்வி இலாகா தலைவர் Richard Butler தலைமையில் நிறைவேற்றினர்.

இனி இளைஞர்கள் எளிதிற் செய்யக்கூடிய சில காரியங்களைப் பற்றிப் பேச எண்ணுகிறேன். நாயன்மார் சரித்திரங்களில் முக்கிய பகுதிகளை ஓவியங்கள் மூலமாக அவர்கட்குத் தெரிவிக்கலாம். திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி முதலியவற்றின் கருத்துக்களை ஓவியங்கள் மூலமாக வெளிப்படுத்தினால் அவை நன்றாக மனதிற் பதியும் "மாதே! வளருதியோ!......போதாரமளியின்மேல் நின்றும் புரண்டு......கிடந்தாள்.....எம்பாவாய்" என்பதைச் சொல்வதைவிடப் படத்தின் மூலமாகப் போதிப்பின் அதன் பயன் வேறுதான். சில பழைய ஆபரணங்கள் ஆயுதங்கள் பறவைகள் புஷ்பங்கள் முதலியனபற்றி நமக்கு ஒன்றும் தெரியவேயில்லை. அன்றில் ஐம்படை அனிச்சம் முதலியனபற்றிய ஆராய்ச்சி தேவை. மாதிரிகள் செய்து ஆலயங்களில் பொருட்காட்சிச் சாலை நிறுவப்படல் வேண்டும். விவிலிய நூலில் வரும் ஆபரணங்கள் ஆயுதங்கள் மரங்கள் பூக்கள் முதலியவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு நூலாக்கியுள்ளனர். நாமும் இவ்வாறு செய்யவேண்டும். சாத்திரங்களை நாம் எளிதிற் படித்துத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் அவை இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே நாம் அவைகளைப் படிக்க விரும்புகிறோமா என்பதுதான் கேள்வி. அப்படியிருப்பின் எளிய உரை நடைகள் வெளிவந்திருக்கும். வானொலியில் சாத்திரப் பேச்சுக்களும் இடம்பெற நாம் கிளர்ச்சி செய்தல் வேண்டும். பொங்கல், பிள்ளையார் சதுர்த்தி, கலைமகள் விழா, புது வருடம் போன்ற நாட்களை ஒருவருக்கொருவர் ஞாபகப்படுத்திக்கொண்டு உயர்ந்த கருத்துக்கள் எழுதப்பட்ட கடிதங்களை மாற்றிக்கொள்ளலாம். பெரிய புராணம் முதலிய வரலாறுகளை உண்மை நோக்கத்துடன் படித்து அடிப்படையான கருத்துக்களை உணர்ந்து அவற்றின்படி நடக்க வேண்டும். சமயப் பற்றுடையவர்கட்குத் தமிழ்க் கல்வி இன்றியமையாதது. பல்கலைக் கழகப் பட்டம்பெற்ற வித்துவான்கள் பட்டம் பெற்ற பின்பு மேன்மேலும் கற்பதற்கு ஊக்கங் கொள்வதில்லையென்று எனது குருநாதர் அடிக்கடி கூறுவதுண்டு. இந்நிலை இப்போது விரைவில் மாறி வருகிறதென்பதைக் கேட்க

அவாவுடையேன். இயல் இசை நாடகம் இலக்கணம் இலக்கியம் சாத்திரம் ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்றில் சிறப்பறிவு பெற வேண்டியது அவசியம். பழைய காலத்தில் ஒவ்வொருவர் ஒரு நூலில் மிக வல்லுநராக இருந்து அந்நூலில் எத்தகைய ஐயத்தையும் நீக்கும் ஆற்றலுடையவராயிருந்தனர் என்று நாம் கேள்விப் படுகிறோம். அத்தகைய பெரியார்கள் தற்காலத்திற்கும் அவசியம். நம் ஆலயத்தில் விநாயக மூர்த்தம் ஆறுமுக உருவம் நடராஜ விக்கிரகம் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய உருவங்கள் ஏன் ஏற்பட்டன அவற்றின் தத்துவங்கள் என்ன என்ற விஷயங்கள் இளைஞர்கட்குக் கட்டாயம் தெரிய வேண்டியதொன்று. சில உருவங்களைப்பற்றிப் பிற நாட்டினர் ஒவ்வாத சில கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அத்தகைய குறைகளைச் சான்றுகளுடன் மறுத்து உண்மையை நிலைநாட்ட வேண்டும்.

சைவப் பெரியார்களுடைய வாழ்க்கை தொண்டின் பாற்பட்டதாகவே இருக்கின்றது. நமது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டியதும் தொண்டு. மேலே நாம் செய்யவேண்டிய தொண்டுகளை ஆராய்ந்தோம். பல தீர்மானங்களை நிறைவேற்றி ஒன்றும் செய்யாதிருப்பதைவிட, இரண்டொரு தீர்மானங்களை நிறைவேற்றிச் செயலிலும் நிறைவேற்றி முடித்தல் நலம். நமக்குள் இந்த கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு முயற்சி செய்வோமாக.

திரு. ஈ. த. இராஜேசுவரியம்மையார் மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை :—ஒன்றுக்கும் போதாத என்னை இம்மாதர் மாநாட்டின் தலைமைப் பதவியில் இருத்திய உங்கள் அன்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில ஆண்டுகளாக மாதர் மாநாடு தனியே வேறு கூடும் வழக்கம் நின்று போயிருந்தது. மாதரை மறுபடியும் தனியே வேறு பிரிக்கவேண்டுமா என்ற கேள்வியே முதன் முதலில் எனது மனதில் எழுந்தது. அங்கயற்கண்ணி முதல் மங்கம்மாள் வரையில் பெண்ணரசின் பெருமை வளர்த்த மதுரை மாநகரத்தில் சமாஜம் கூடுவதால் சக்திபீடம் மறுபடியும் வீறுபெற்று எழுகிறது போலும்.

"பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்பதுமட்டுமன்று சைவத்தின் பெருமை. பெண்கள் கையில் வளர்ந்த பெருமையும் சைவத்திற்குண்டு. தமிழ்நாட்டிலே ஸ்சைவத்தைப் பற்றி முதல்முதல் எழுதிய பெரியார் யார்? சமய குரவர்களுக்கு முன்பாகச் சங்க காலத்திலேயே சைவத்தின் உயிர் நிலையான உண்

மைகளை உயிர் உருக்கும் பாடல்களாகப் பொழிந்தவர் காரைக்காலம்மையார் அன்றோ? யாப்பருங்கல விருத்தியுரையில் வரும் குறிப்பொன்று அம்மையார் சங்க காலத்தவர் என்பதனை நிலைநாட்டுகின்றது. மூவர் முதலிகளும் பெண்ணருளால் பேறுபெற்றவரே. திலகவதியார் இல்லையானால் திருநாவுக்கரசு நாயனார் எங்கே? "தம்பியார் உளராக வேண்டும் என வைத்ததயா, உம்பருலகணையவுறும் நிலை விலக்க...தவம்புரிந்து திலகவதியார் இருந்தார்" என்றபடி தம்பிக்கென வாழ்ந்தவரன்றோ அந்த அம்மையார்? பெற்றோர் உற்றோர் இன்றித் தனியே வாழ்ந்தும், தம்பியாரை அந்நாளைய அறிவுலகின் தலைவராக ஆக்கிய பெருமை அவ்வம்மையாருடையதேயாகும். எந்த தம்பிக்கென வாழ்ந்தாரோ அவரும் இவரைத் தனியே விட்டுச் சென்றார். அப்போதும் மனம் கலங்காமல் செம்மை நலம் திகழும் சிவத்தொண்டே செய்து உடலும் உயிரும் வாழ ஒப்பற்று விளங்கினார். அதுதானோ? "அடியேன்பின் வந்தவனை ஈண்டு வினைப் பரசமயக்குழி நின்றும் எடுத்தாளவேண்டும்" எனக் கடவுளை வேண்டினர். உறுகயிறூசல்போல ஒன்று விட்டொன்று பற்றிய நெஞ்சினராக மருணீக்கியார் சூலை நோயால் வாடினார். தமக்கையார் நினைவு வந்தது. என் வந்தது? ஒரு துணை இல்லாதபோதும் உறுதிப்பாட்டிற் குறையாது உண்மைத்தொண்டாற்றிய அம்மையாரின் அமைதி விளக்கும் திருமுகமும், அமுதம் நிறைந்த சொல்லும், அன்பு நிறைந்த அருந்தவமும் நினைவிற்கு வந்தன. அப்பெண்மணியையே குருவாகக் கொள்ள விதுவிதுப்புற்றார். இரவென்றும் பாராது பொறுத்தற்கரிய நோயிலும் ஓடோடியும் வந்தார். திலகவதியாரும் குருவாகி ஆட்கொண்டார். என்ன தீக்ஷை, சடங்கு, உபதேசம் நடந்தது? "திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றார்." "திலகவதியார் திருஅலகும் திருமெழுக்குத் தோண்டியுங் கொண்டு, ஆறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொடுப்பார்". இவ்வாறு பிறமதத்தினரைச் சைவராக்க நீங்கள் முன்வருவீர்களா? "விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்", "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே...புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு..." என்று பல பாடல்களில் இத்தொண்டினை வற்புறுத்திய அப்பர் பெருமான் தம் ஆண் கோலத்திற்கேற்ப உழவாரப்படைதாங்கி "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று செயலில் காட்டிவந்தார். அப்பரைப் பின்பற்றிய அப்பூதியடிகளும் மேற்கொண்டது உயிர்த் தொண்டாம் சிவத்

தொண்டே. சமுதாயத் தொண்டிற்கு இந்துமதத்தில் இடமில்லை என்னும் மேனாட்டின் வாயைப் பூட்டச் சைவத்திற்கு வாயளித்தவர் எங்கள் திலகவதியாரேயன்றோ?

மங்கையர்க்கரசியார் இல்லையானால் ஞானசம்பந்தப் பெருந்தகையார் பெருமை எங்கே? இந்தக் குழவிப்பெருமானது சிவம் பெருக்கும் பாடல்களைப் பற்றிக் கேட்டதும் தாயே போல மனமுருகி நின்ற சைவ அன்பை இவரிடத்தன்றி வேறெங்கேனும் கதையிலேனும் கேட்டதுண்டா? பெண்ணிற்கு வீடுபேறில்லை என்ற கொள்கை பரவியபோது பெண்ணின் நெஞ்சம் எரியாதா? கடவுள் நெறியில் பெண்ணுரிமை தேடி வைத்த பெருமை மங்கையர்க்கரசியார்க்கே உண்டு. இப்புரட்சியைச் செய்ய முன் வந்தவர் அந்த அம்மையாரேயாம். என்ன புரட்சி? அன்புப் புரட்சி, தன் அகமுடையான் வாழத் தன் அரசு வாழ உலகம் வாழ அன்பினால் செய்த புரட்சியேயாம். இஃதிவ்வாறிருக்க, எண்ணாயிரவர் கழுவேறினர் என்பதெற்றுக்கு? வரலாற்று நூல்கள் இதை ஒப்புக் கொள்ளவில்லையே! ஞானசம்பந்தப் பெருந்தகையார் இப்புரட்சி வெற்றிபெறுமாறு செய்து, உளங்குளிர்ந்த போதெல்லாம் உவந்து வந்து பாடி, இயற்கையாம் கோயிலிலே, இன்ப அன்புருவான கடவுளைப் பெண்ணின் பெருவைப்பாகப் பாடி, உலகமுழுதும் குழவிக் கூத்தாடி வந்தார். உலகைத் துறந்து ஓடாமல், உலக வாழ்வையே கடவுள் வாழ்வாக நடத்தும் வழியைத் தனியிளங் குழவியார் மங்கையர்க்கரசியார் வாழ்விலேயே கற்றுத் தெளிந்தார். "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்......தெய்வப்பாவை" என்று சேக்கிழார் வாயார வாழ்த்துகின்றார்.

(தொடரும்)

---

Editor : M. Balasubrahmanya Mudaliar, B. A., B. L.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by T. V. Vol[illegible] (Publisher) for the Saiva Siddhanta Maha Sam[illegible]ngu[illegible] Chelvavinayagar Koil Street, Mylapore, Mad[illegible]s.